FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

01) அமலியும், ராணியும் தொலைபேசி வழியாக உரையாடிக் கொண்டிருக்கின்றனர். இச்சூழலை அடையாளப்படுத்தக்கூடிய பொருத்தமான தொடர்பாடல் வகை
(1) ஆளிடைத் தொடர்பாடல்
(2) இருவழித் தொடர்பாடல்
(3) அகமுகித் தொடர்பாடல்
(4) இலத்திரனியல் தொடர்பாடல்
(5) குழுத் (கூட்டுத்) தொடர்பாடல்

02) தொடர்பாடலில் தடை குறித்து மிகத் தெளிவாகக் குறிப்பிடும் மாதிரி
(1) ஷெனொன் வீவர் மாதிரி
(2) ஹரல் டீ லஸ்வெல் மாதிரி
(3) வில்பர் ஷ்ராம் மாதிரி
(4) டேவிட் கே. பெர்லோ மாதிரி
(5) ஒஸ்குட் - ஸ்ராம் மாதிரி

03) உலக்கிராமம் ஒன்றில் உருவாக்கம் வெகுசன ஊடகங்களின் பரவுகையை அடிப்படையாகக் கொண்டது. இக்கருத்தை முன்மொழிந்தவர்
(1) டானியல் லேனர்
(2) மார்ஷல் மெக்லுஹான்
(3) லூசியன் பை
(4) வில்பர் ஷ்ராம்
(5) டேவிட் கே. பெர்லோ

04) உடனடிப் பின்னூட்டல் இடம்பெறுவது
(1) உள்ளகத் தொடர்பாடலில்
(2) தனியாள் தொடர்பாடலில்
(3) கூட்டுத் தொடர்பாடலில்
(4) நபரிடைத் தொடர்பாடலில்
(5) மக்கள் தொடர்பாடலில்

05) தொடர்பாடல் செயன்முறையில் தடையுடன் சார்பற்ற காரணியாக அமையக் கூடியது
(1) கருத்து
(2) மொழி
(3) கருவி
(4) பண்பாடு
(5) விளைவு

06) பின்வரும் தொடர்பாடல் மாதிரிகளில் பரிமாற்ற மாதிரிக்கு எடுத்துக் காட்டாக அமைவது
(1) பர்லோ மாதிரி
(2) ஷெனோன் வீவர் மாதிரி
(3) லாஸ்வெல் மாதிரி
(4) வெசுப்லி மாதிரி
(5) ஒஸ்குட் மாதிரி

07) பிராந்திய மட்டத்தில் வானொலி, தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்படுவதன் முதன்மை நோக்கமாக அமையக்கூடியது
(1) பிராந்திய மக்களை அபிவிருத்தி செயற்பாட்டில் பங்கேற்க வைத்தல்
(2) பிராந்திய மட்டத்தில் வியாபார நோக்கத்தை விரிவாக்குதல்
(3) பிராந்திய மட்டத்தில் ஊடக செயற்பாட்டின் வீச்சைப் பரவலாக்குதல்
(4) பிராந்திய மட்டத்தில் வெகுசன ஊடகக் கலாசாரத்தை விரிவாக்குதல்
(5) பிராந்திய மட்டத்தில் ஒலி, ஒளிபரப்பு தூரத்தை மேம்படுத்தல்

08) எந்தவொரு தொடர்பாடல் நிலைமையிலும் அத்தியாவசியமாகக் காணப்படும் கூறு
(1) திட்டமிடல்
(2) தகவல் பரிமாற்றம்
(3) தகவலின் செம்மை
(4) பெறுநரின் பின்னூட்டல்
(5) பொருத்தமான ஊடகங்களைப் பயன்படுத்தல்

09) தகரக் கூரையுடைய ஒரு மண்டபத்தில் விரிவுரையாற்றிக் கொண்டிருந்த விரிவுரையாளர் ஒருவரது குரலிலும் பார்க்க அப்போது திடீரெனப் பெய்த மழை தகரத்தில் விழுந்து எழுப்பிய சத்தம் மேலோங்கி இருந்தது. இது
(1) ஒரு மொழி ரீதியான இடையூறு
(2) ஒரு சூழலியல் இடையூறு
(3) ஓர் ஊடக இடையூறு
(4) ஒரு மொழி ரீதியான அதேவேளை ஓர் ஊடக இடையூறு ஆகும்.
(5) ஒரு சூழலியல் அதேவேளை ஓர் ஊடக இடையூறு ஆகும்.

10) வானொலி ஊடகத்துக்கே சொந்தமான விசேட இயல்பாக இருப்பது
(1) மனித மனதில் ஆழமான மனவெழுச்சிகளை உருவாக்கும் ஊடகமாக இருப்பது
(2) எளிமையான மொழிவடிவம் கொண்ட ஊடகமாக இருப்பது
(3) வீட்டில் பயன்படுத்தப்படும் ஊடகமாக இருப்பது
(4) தனிமையைப் போக்கும் ஊடகமாக இருப்பது
(5) வர்த்தக விளம்பரங்களுக்கான ஊடகமாக இருப்பது

11) ஆசிரியரால் அந்நிய மொழியில் தரப்பட்ட அறுவுறுத்தல்களை விளங்கிக் கொள்ளும் முயற்சியில் ஒரு மாணவன் அல்லது மாணவிக்கு நேரக்கூடியது
(1) குறிமுறையாக்குதல்
(2) செய்தி அறிக்கைப்படுத்தல்
(3) மொழிபெயர்ப்பு
(4) குறிமுறையவிழ்த்தல்
(5) புத்தாக்கம் செய்தல்

12) ஆக்கத் தொடர்பாடல் பல்வேறு சமூக காரணிகளால் போஷிக்கப்படுகிறது. இங்கே மிக முக்கிய காரணிகளாக அமைவன
(1) கல்வி, சமயம், கலாசாரம்
(2) மக்கள் மரபு (நாட்டாரியல்), சமயம், கலாசாரம்
(3) ஒழுக்கம், பொருளாதாரம், சூழல்
(4) தொழில், மரபு, நம்பிக்கைகள்
(5) சமூக உறவுகள், விழுமியம், நம்பிக்கை

13) பிரசித்தமான கலாசார (*populer culture*) பற்றிய பொருத்தமற்ற கூற்றாக அமைவது
(1) வணிக ஆதாயங்களின் பால் கட்டமைக்கப்படுவது
(2) சிறுவர்களையும் இளைஞர்களையும் கவர்ந்திழுப்பது
(3) நீண்ட காலத்துக்கு மாற்றங்களுக்கு உட்படாமல் நிலைத்திருப்பது
(4) வெகுசன ஊடகங்களுடன் நெருங்கிய உறவைப் பேணுவது
(5) சமூக நடத்தைகளின் பால் பாதிப்பை உருவாக்குவது

14) ஊடக எழுத்தறிவு (*media literacy*)

A - ஊடகவியலாளர்கள் அவசியம் கொண்டிருக்க வேண்டிய ஒரு திறன்

B - வெகுசன ஊடக நடத்தைகள் பற்றிய புரிதலை வழங்குவது

C - பாடசாலைக் கல்விச் செயன்முறையுடன் அவசியம் இணைக்கப்பட வேண்டியது

மேற்குறித்த கூற்றுக்களில்

(1) A யும் B யும் சரியானவை C தவறானது

(2) A யும் C யும் சரியானவை B தவறானது

(3) B யும் C யும் சரியானவை A தவறானது

(4) A, B, C ஆகிய அனைத்தும் சரியானவை

(5) A, B, C அனைத்தும் தவறானவை

15) பேராசிரியர் ஜொஹான் கல்ரங் இன் முரண்பாட்டு முக்கோணியில் (*Triangle of Conflicts*) முக்கிய கூறுகளாக அமைவன

(1) கட்டமைப்பு, உளப்பாங்குகள், நடத்தை

(2) உளப்பாங்குகள், உடன்பாடின்மை, நடத்தை

(3) புரிந்துணர்வின்மை, உளப்பாங்குகள் நடத்தை

(4) கட்டமைப்பு, உரித்தாளர்கள், உளப்பாங்குகள்

(5) உரித்தாளர்கள், உடன்பாடின்மை, உளப்பாங்குகள்

16) லெனின். மார்க்ஸ், ஏஞ்சல் ஆகியோரின் சிந்தனைகள் அடையாளப்படுத்தப்படுவது

(1) சேவியத் பொதுவுடைமைக் கோட்பாட்டை

(2) சமூகப் பொறுப்புக் கோட்பாட்டை

(3) தாராண்மைவாதக் கோட்பாட்டை

(4) சுதந்திரவாதக் கோட்பாட்டை

(5) ஆதிக்க வாதக் கோட்பாட்டை

17) தகவல் விநியோகத்தில் மேலைத்தேய மேலாதிக்கம் என்பதன் அர்த்தமாக அமைவது

(1) வணிக தன்னாதிக்கம் மேலைத்தேய நாடுகளால் பேணப்படுகிறது

(2) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது தடைகளை விதிப்பது

(3) ஜனநாயகம் பற்றிய தகவல்களை விநியோகிப்பது

(4) தகவல் ஊடகமான இணையம் மீது கட்டுப்பாடுகளை மேற்கொள்வது

(5) தங்களது விருப்பங்களுக்கு ஏற்றவாறு தகவல் பரவுகையைக் கையாள்வது

18) அபிவிருத்தி தொடர்பாடல் பரிவர்த்தனை மாதிரியை முன்வைத்தவர்

(1) லாஸ்வெல்

(2) நாயர் மற்றும் வைட்

(3) மாவோசேதுங்

(4) காந்தியடிகள்

(5) எவரட் எம் ரோஜர்ஸ்

19) வானொலி ஊடக செயற்பாட்டின் தனித்துவமாக அமையாதது

(1) உடனடித்தன்மை

(2) நடித்தல், எழுதுதல் அடிப்படையானது

(3) உயர்மட்ட கற்பனை உருவாக்கம்

(4) ஒலி ஊடக காட்சி உருவாக்கம்

(5) சந்தம் வேகம் அடிப்படையானது

20) மாற்று ஊடகம் (*Altemative*) தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஜனரஞ்சக கலாசாரத்திற்கு சார்பானது

B - ஜனரஞ்சக கலாசாரத்திற்கு எதிரானது

C - இலாபநோக்கு கொண்டமைந்தது

D - சமூக மாற்றத்தை மையமாகக் கொண்டு இயங்குதல்

E - பிரதான ஊடகத்துடன் இணைந்து இயங்குவது

(1) A யும் C யும் மாத்திரம்
(2) B யும் D யும் மாத்திரம்
(3) C யும் E யும் மாத்திரம்
(4) B யும் D யும் E யும் மாத்திரம்
(5) A யும் C யும் D யும் E யும் மாத்திரம்

21) மோசமான தொடர்பாடுபவரின் பண்பாகக் கொள்ள முடியாதது

(1) பெறுநரிற்கு பயனற்ற செய்திகளை வழங்குதல்
(2) இருவழித் தொடர்புக்கு வாய்ப்பு வழங்குதல்
(3) கேட்கப்படாத செய்திகளையும் தொடர்பாடுதல்
(4) நோக்கின்றிய தொடர்பை முன்னெடுப்பவர்
(5) தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு உட்பட்டுத் தொடர்பாடுதல்

22) மாநாடு ஒன்றின் விரிவுரை ஒன்றினை வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் முன்னெடுப்பதற்கு விரிவுரையாளர் தெரிவு செய்கின்ற ஊடக உபகரணங்களில் முதன்மையான இடத்தைப் பெறக்கூடியது

(1) வழுக்கி எறிவை உபகரணம்
(2) ஒலிபெருக்கி உபகரணம்
(3) துரித எறிவை
(4) மேந்தலை எறிவை
(5) பல்லூடக எறிவை

23) ஆர்ப்பாட்டம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் அச்சுறுத்தப்பட்டு விரட்டப்பட்டனர். இச்செயற்பாடு தொடர்புபடும் தொடர்பாடல் எண்ணக்கரு

(1) சமூகப் பொறுப்புத் தொடர்பாடல் எண்ணக்கரு
(2) சுதந்திரத் தொடர்பாடல் எண்ணக்கரு
(3) எதேச்சதிகாரத் தொடர்பாடல் எண்ணக்கரு
(4) அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு
(5) சோசலிசத் தொடர்பாடல் எண்ணக்கரு

24) குறித்த, சமூகத்திற்குப் பொருத்தமான அமைப்பொழுங்கையும், நடத்தையையும், ஒத்த தன்மையிலான வாழ்க்கை முறையையும் ஏற்படுத்தும் நோக்கிலான வெகுசன ஊடக நோக்காகவும், பணியாகவும் அமைவது

(1) தகவல் வழங்குதல்
(2) சமூகமயமாக்கல்
(3) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குதல்
(4) தூண்டலை ஏற்படுத்தல்
(5) விழிப்புணர்வை ஏற்படுத்தல்

25) "குமார் தன்னுடைய நண்பர்களுடன் பழத்தோட்டத்தில் பழங்களை பறிக்கும் போது எங்களுடைய தேவைகளின் அளவைக் கருத்திற் கொண்டு பறிக்குமாறு அறிவுறுத்தினான்" இக்கூற்றின் உள்ளடக்கம் தொடர்புபட்டமையும் எண்ணக்கரு

(1) பேண்தகு அபிவிருத்தி எண்ணக்கரு
(2) சுற்றாடல் தொடர்பாடல் எண்ணக்கரு
(3) சமுதாய அபிவிருத்தி எண்ணக்கரு
(4) விவசாய அபிவிருத்தி எண்ணக்கரு
(5) சமூகத் தொடர்பாடல் எண்ணக்கரு

26) வெகுசன ஊடக விளம்பரங்கள் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.

A - பண்புசார் பார்வை நோக்கை உருவாக்குதல்

B - மக்களின் சிந்தனையை மாற்றியமைத்தல்

C - சமூகத்ததுடன் தொடர்பை கட்டியெழுப்புதல்

D - நன்மதிப்பையும் நல சேவையையும் கட்டியெழுப்புதல்

மேற்குறித்த கூற்றுக்களில்

(1) A மட்டும் சரியானது

(2) A யும் B யும் மட்டும் சரியானது

(3) B யும் C யும் மட்டும் சரியானது

(4) A யும் C யும் D யும் சரியானது

(5) A, B, C, D ஆகிய அனைத்தும் சரியானது

27) மாஸ்லொவின் தேவைக்கூம்பின் அடிப்படையில் ஒருவரிடத்தில் தாழ்வுணர்ச்சி ஏற்படக் காரணமாக அமையக்கூடிய தேவை

(1) கணிப்புத் தேவை
(2) அன்பு உறவுத் தேவை
(3) உடலியல் தேவை
(4) காப்புத் தேவை
(5) சுய திறனியல் நிறைவுத் தேவை

28) செய்தி அறிக்கையிடல்களுக்கு அடிப்படையாக அமைகின்ற தகவல் மூலங்களின் வகிபங்காக கொள்ள முடியாதது.

(1) பின்னூட்டல் செயன்முறைக்கு உதவுகின்றன.
(2) செய்தியை உறுதிப்படுத்த உதவுகின்றன.
(3) செய்தி தொடர்பில் பல்வேறு தகவல்களைத் தருகின்றன.
(4) செய்தியை ஆதாரப்படுத்துகின்ற ஆவணமாக உதவுகின்றன.
(5) செய்தி அறிக்கையிடலை உருவாக்க பங்கெடுக்கின்றன.

29) ஊடக விமர்சகர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்பு அல்லாதது

(1) ஊடகம் பற்றிய குறிப்பிட்ட அளவு அறிவு
(2) ஊடகம் பற்றிய பரந்தளவு அறிவு
(3) பெறுநர் பற்றிய ஆழ்ந்த அறிவு
(4) ஊடகத்தின் மீது நேரடி, மறைமுகமாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய அறிவு
(5) ஊடக உள்ளடக்கம் பற்றிய அறிவு

30) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய நாயர் - வைட் ஆகியோரின் பரிவர்த்தனை மாதிரி அணுகுமுறையில் உள்ளடக்கப்பட முடியாத எண்ணக்கரு

(1) மேல்மட்ட பங்கேற்பை உயர்த்துதல்
(2) ஊடகங்களின் ஒருங்கிணைப்பு
(3) ஒன்றிணைந்து தீர்மானித்தல்
(4) கீழ் இருந்து மேல் நோக்கிய அபிவிருத்தி
(5) குழுக்களை உருவாக்குதல்

31) டய்லர், லிண்டன், மலினோஸ்கி ஆகியோர் வரைவிலக்கணம் செய்தது

(1) ஊடகக் கலாசாரம் பற்றி
(2) கலாசாரம் பற்றி
(3) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றி
(4) சமூகப் படிமம் பற்றி
(5) அபிவிருத்தி பற்றி

32) ஒத்துணர்வு (*Empathy*) ஊடாக அடையக்கூடிய நன்மை அல்லாதது

(1) கூட்டுணர்வுத் தன்மை
(2) சமூக அங்கீகாரம்
(3) மனித உறவு மேம்படல்
(4) ஆரோக்கிய வாழ்வு
(5) மனவெழுச்சிக்கு உட்படல்

33) முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக ஒரு தொகுதி மாணவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

ரகு :- முரண்பாட்டை நேர்முறையில் (*Positive*) அணுகுதல்
குமார் :- முரண்பாட்டை உடன்பாடான நிலைக்கு இட்டுச் செல்லல்
பாலன் :- முரண்பாட்டை மறுத்தலுக்கு உட்படுத்தல்
கஜன் :- முரண்பாட்டு சூழ்நிலையை ஆக்கபூர்வ நிலைக்கு நகர்த்துதல்
மாதவன் :- முரண்பாட்டினை பயங்கரநிலை, அழிவு மட்டம் நோக்கி நகர்த்துதல்

மேற்படி கூற்றுக்களில் முரண்பாடு முகாமைத்துவ எண்ணக்கரு தொடர்பில் சரியான நிலைகளை வெளியிட்டவர்கள்

(1) ரகு மற்றும் பாலன்
(2) ரகு, பாலன் மற்றும் கஜன்
(3) ரகு, குமார் மற்றும் கஜன்
(4) குமார், பாலன் மற்றும் மாதவன்
(5) குமார், பாலன், கஜன் மற்றும் மாதவன்

34) பின்வருவனவற்றில் வானொலி ஊடகத்திறன் அல்லாதது

(1) செவிமடுத்தல் திறன்
(2) உச்சரிப்பத் திறன்
(3) பிரதியாக்கத்திற்கான படைப்பாக்கத்திறன்
(4) காட்சியாக்கத்திறன்
(5) பல்குரல் வெளிப்பாட்டுத் திறன்

35) ஷெனொன் வீவர் தொடர்பாடல் மாதிரியில் தகவல் சென்றடையும் இடம் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

(1) பெறுகை
(2) தாக்கம்
(3) உச்சஸ்தானம் (*Destination*)
(4) பெற்ற சமிக்ஞை
(5) விளைவு

36) முரண்பாட்டு சூழ்நிலை உருவாவதற்கு ஏற்புடைய கலாசாரமாக அமையக்கூடியது

(1) அறிவுச் சமூக கலாசாரம்
(2) வெகுசன ஊடக கலாசாரம்
(3) மேலைத்தேய கலாசாரம்
(4) கீழைத்தேய கலாசாரம்
(5) பல்லின சமூக கலாசாரம்

37) பின்வருவனவற்றுள் பொதுமக்கள் தொடர்பு (*Public Relation*) நோக்கத்தை பிரதிபலிப்பது

(1) மக்கள் குழுவிடம் பயனுறுதிமிக்கத் தொடர்புகளை பேணுதல்
(2) முறைசார் நிதிமுகாமையைப் பேணுதல்
(3) வெகுசன ஊடகங்களை நன்றாகப் பயன்படுத்தல்
(4) பல்வேறு தரப்பினரிடம் பொறுப்புக்களை கையளித்தல்
(5) திட்டத்தை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

38) நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டும், பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டும் உடன்பாட்டினை எட்டவும் பயன்பாடும் தொடர்பாடல் வகை

(1) கூட்டுத் தொடர்பாடல்
(2) நபரகத் தொடர்பாடல்
(3) நபரிடைத் தொடர்பாடல்
(4) வெகுசனத் தொடர்பாடல்
(5) நிறுவனத் தொடர்பாடல்

39) "சீன அபிவிருத்தி தொடர்பாடல் கட்டமைப்பில் மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்தல் திட்டத்துடன் மேலும் ஐந்து உப திட்டங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது" பின்வரும் உப திட்டங்களில் உள்ளடங்காத திட்டமாக அமைவது

(1) அதிகாரவர்க்க பலத்தை இழிவளவாக்குதல்
(2) அதிகாரவர்க்க பலத்தை உயர்மட்டத்தில் பேணுதல்
(3) நல்லொழுக்கத்தை உறுதிப்படுத்தல்
(4) மக்கள் - அரசு இடைவெளியைக் குறைத்தல்
(5) மொழிமயமாக்கத்திற்கு அடிமைப்படாதிருத்தல்

40) “ஏழ்மையற்றதும் சொகுசற்றதுமான சமூகமொன்று” என்ற அடிப்படை தூரநோக்கில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுகின்ற நிறுவனம்

(1) சுகாதார பணிமனை
(2) சமுர்த்தி அதிகாரசபை
(3) பிரதேச அபிவிருத்தி சபை
(4) சனச வியாபார வேலைத்திட்டம்
(5) சர்வோதய வியாபாரத் திட்டம்

41) பின்வரும் கூற்றுக்களில் உலகமயமாதல் செயன்முறை பிரதிபலிக்காதது

(1) மேலைத்தேய பண்பாட்டின் பரவுகை
(2) முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு சார்பானது
(3) தேசியம் வலுப்பெற்று பூகோளமயம் நலிவடைதல்
(4) நவீனத்துவ அடையாளங்களுடன் நெருக்கமானது
(5) சுதேச பண்பாட்டிற்கு அச்சுறுத்தலானது

42) எழுத்து மூல தகவல் தொடர்பின் பாதகமான அம்சமாக அமையாதது

(1) சந்தேகங்களை தெளிவுபடுத்த முடியாது
(2) உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாதது
(3) ஆவணமாக எப்போதும் பேணலாம்.
(4) செய்தி கடினமாக அல்லது சிக்கலானதாக அமையும் போது தாக்கம் குறைவாக அமைதல்
(5) செய்தியை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்தல் கடினம்

43) கிளைமொழி (*Dialect*) பற்றி அறிமுகஞ் செய்வதில் பொருத்தமற்ற விடயத்தை தெரிவு செய்க.

(1) பிரதான மொழியினுள் துணைமொழி இருத்தல்
(2) உபகலாசார இயல்புகளைக் கொண்டிருத்தல்
(3) பிரதேச மொழிகளின் இயல்புகளைக் கொண்டிருத்தல்
(4) ஆதார மொழி இயல்புகளைக் கொண்டிருத்தல்
(5) குறுகிய குழுக்களுக்கிடையில் பயன்படுத்தல்

44) கிராமிய அபிவிருத்தித் திட்டத்திற்குரிய செய்திகளைத் தயாரிக்கும் போது பாரம்பரியத்துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனத் தொடர்பாடவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறான முடிவுக்கு வருதல் சாத்தியமாக இருப்பது

(1) பாரம்பரிய நூல்களின் உரிமைகள் சிக்கல் இல்லாமல் இருப்பதனால்
(2) பாரம்பரிய மக்களின் மெய்யறிவுக்கு நெருங்கி இருப்பதனால்
(3) பாரம்பரியம் என்பது கிராமிய அடிப்படையுள்ள ஆக்கமாக இருப்பதனால்
(4) பாரம்பரியத்திற்கும் அபிவிருத்திக்கும் இடையில் தொடர்பு இருப்பதனால்
(5) பாரம்பரியம் ஆக்கபூர்வமான தொடர்பாடற் தந்திரமாக இருப்பதனால்

45) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் பல காவல்காரர்கள் உள்ளனர் எனக் கூறப்படுகிறது. நீங்கள் அவ்வாறான காவல்காரன் என்றால் உங்களது செயற்பாட்டில் இறுதிப் பலன் என்பது

(1) வெகுசன ஊடகங்களிக்கிடையிலுள்ள போட்டியைக் கட்டுப்படுத்தல்
(2) வெகுசன ஊடகங்களில் இருக்கும் சமநிலையைக் கட்டுப்படுத்தல்
(3) வெகுசன ஊடகங்கள் ஊடாகச் செய்திகள் செல்வதைக் கட்டுப்படுத்தல்
(4) வெகுசன ஊடகங்களுக்குள்ள உள்ளடக்கத்தின் பிழையற்ற நிலையைக் கட்டுப்படுத்தல்
(5) வெகுசன ஊடகங்களில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் கட்டுப்படுத்தல்

46) ஹரோல்ட் டீ லாஸ்வெஸ் இன் தொடர்பாடல் மாதிரி

A - வட்டச்சுற்று பாய்ச்சலைக் கொண்டது

B - செயல்விளைவு பற்றி அதிக கவனம் செலுத்துகிறது

C - பெறுநரிடம் குறைந்த கவனத்தைச் செலுத்துகிறது.

D - தொடர்பாடல் முறையின் நான்கு பிரதான மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டது.

மேற்குறித்த கூற்றக்களில்

(1) A, B ஆகியன மாத்திரம் உண்மையானவை

(2) A, C ஆகியன மாத்திரம் உண்மையானவை

(3) C, D ஆகியன மாத்திரம் உண்மையானவை

(4) B, C ஆகியன மாத்திரம் உண்மையானவை

(5) A, B, C, D ஆகிய எல்லாம் மெய்யானவை

47) அபிவிருத்தி பற்றி பொதுமையான வழிகள் இல்லை. ஒவ்வொரு நாடும் தமது நாட்டுக்கு உகந்த தந்திரோபாயங்களைக் கொண்டுள்ளன. இக்கூற்று ஏற்ப அபிவிருத்தியடையும் நாடு ஒன்றின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பயன்படுத்த முடியாதது எது?

(1) நவீன மயமாக்கல்
(2) நகரமயமாக்கல்
(3) கைத்தொழில் மயமாக்கல்
(4) மேலைத்தேய நாகரிகமயமாக்கல்
(5) ஆழ்பரிவு (*Empathy*)

48) வலுவான சமூகமொன்றில் வாண்மையாளர்களினால் உருவாக்கப்பட்ட கலாசாரமாக இருக்கக் கூடியது.

(1) பல்லின மக்கள் கலாசாரம்
(2) வெகுசன கலாசாரம்
(3) பண்டைய உயர் கலாசாரம்
(4) பிரமுகர் கலாசாரம்
(5) இனக் கலாசாரம்

49) தகவல்களை ஊடுகடத்துவதற்கான சில முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - தொலைபேசிச் சேவையைப் பொருத்துதல்

B - செல்லிடத் தொலைபேசிச் சேவை

C - சாதாரண தபால் சேவை

D - மின்னஞ்சல் சேவை

E - குறுஞ்செய்தி சேவை (*sms*)

இவற்றுள் ஆளிடைத் தொடர்பாடல் அலைவழிகளாக பயன்படுத்தக்கூடியவை யாவை?

(1) A, B மாத்திரம்
(2) A, B, D மாத்திரம்
(3) A, B, D, E மாத்திரம்
(4) A, B, C, D மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய எல்லாம்

50) ஊடகப் பண்பாடு தொடர்பான சில காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பெறுநர்களின் தேவைகள் பற்றி கவனம் செலுத்தப்படுகிறது.

B - சமூகத் தொடர்பியக்கம் தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

C - தொடர்பாடலின் அனைத்துக் காரணிகளும் உள்ளடக்கப்படுகின்றன.

D - மனிதப் பண்பாட்டின் ஒரு பகுதியாக அமைகிறது.

ஊடகப் பண்பாடு தொடர்பான உண்மையான விடயங்களாக அமைவன.

(1) A, B ஆகியன மாத்திரம்
(2) A, B, C ஆகியன மாத்திரம்
(3) A, B, D ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்